| | | |
|---|---|---|
| | **NST Campus**<br>**மூன்றாம் தவணைப் பரீட்சை - 2026** | |
| **தரம் 07** | **பரதநாட்டியம்** | **1.30 மணித்தியாலம்** |

**சுட்டிலக்கம் : .......................** **புள்ளிகள்**

**பகுதி -I**

**சரியான விடையின் கீழ் கோடிடுக**

1) நடன சாரம் எனும் நூலை எழுதியவர்?

I. சிவசாமி II. லீலாம்பிகை செல்வராஜா
III. ராகவன் IV. சுபாசினி பத்மநாதன்

2) ஐந்தாவது வேதத்தை உருவாக்கியவர்?

I. பிரம்மா II. பரதர் III. சிவன் IV. தண்டுமனிவர்

3) "கோவர்த்தன மலையை துக்கினானான்டி" எனும் அபினய பாடலில் வரும் கடவுள்?

I. முருகன் II. பிள்ளையார் III. கண்ணன் IV. பிரம்மா

4) ஆனந்த தாண்டவம் ஆடப்பட்ட இடம்?

I. மதுரை II. திருக்குற்றாலம் III. திருப்புத்தூர் IV. சிதம்பரம்

5) மென்மையான கரண அங்ககாரங்களுடன் சிருங்காரத்தை வெளிப்படுத்தி பெண்கள் ஆடும் நடனம்?

I. தாண்டவம் II. லாஸ்யம் III. கும்மி IV. கோலாட்டம்

6) தெய்ஹத் தெய்கி அடவின் மறு பெயர்?

I. சாரிகா அடவு II. ஊஞ்சல் அடவு
III. கூடை அடவு IV. குதித்து மெட்டடவு

7) தகிட தகதிமி குறிக்கும் ஜாதி?

I. திஸ்ரம் II. சதுஸ்ரம் III. கண்டம் IV. மிஸ்ரம்

8) 1011 இக் குறியீடு குறிக்கும் தாளம்?

I. துருவ தாளம் II. மட்டிய தாளம்
III. அட தாளம் IV. திரிபுடை தாளம்

9) மாரியம்மனை வேண்டி ஆடப்படும் கிராமிய நடனம்?

I. கரகம் II. காவடி III. கும்மி IV. கோலாட்டம்

10) ஒற்றைக்கை முத்திரையில் ஒன்பதாவது முத்திரை?

I. சுகதுண்டம் II. முஸ்டி III. கடகாமுகம் IV. மயூரம்

11) தியான ஸ்லோகத்தில் ஆஹார்யம் என்பதை காட்ட பயன்படும் முத்திரை?

ஐ. மிருகஸிஸ்யம் ஐஐ. சதுரம் ஐஐஐ. ஹம்ஸபக்ஷம் ஐஏ. கடகாமுகம்

12) வெண்டாமரை தனில் வீற்றிருப்பாளடி எனும் அபினய பாடலில் குறிப்பிடப்படும் தெய்வம்?

ஐ. சரஸ்வதி ஐஐ. இலக்குமி ஐஐஐ. துர்க்கை ஐஏ. மாரியம்மன்

13) ஸா என்பது குறிப்பது?

ஐ. குறில் ஸ்வரம் ஐஐ. நெடில் ஸ்வரம் ஐஐஐ. அன்னிய ஸ்வரம் ஐஏ. கமகம்

14) பாவம் ராகம் தாளம் என்பன?

ஐ. நடனத்தின் உட்பிரிவுகள் ஐஐ. நாட்டிய லட்சணம் ஐஐஐ. நடனத்தின் சிறப்சங்கள் ஐஏ. நாட்டிய முச்சுடர்கள்

15) அலாரிப்பு, ஜதீஸ்வரம் எவ்வகை உருப்படி?

I. நாட்டிய உருப்படி ஐஐ. நடன உருப்படி ஐஐ. நிருத்த உருப்படி ஐஏ. நிருத்திய உருப்படி

(15x2= 30புள்ளி)

## <u>இடைவெளி நிரப்புக</u>

1) ஆதி தாளத்தின் மறு பெயர்………………..ஆகும்

2) காமன் கூத்தில்……………………வாத்தியம் பயன்படுத்தப்படும்

3) விக்னானாம் நாஷனம் என்பது…………….. ஆகும்.

4) நாட்டடவுகள் அமைந்துள்ள தாளம்…………..ஆகும்.

5) ரஸங்கள்…………………………..வகைப்படும் (5x2= 10புள்ளி)

## பகுதி - II

பின்வருவனவற்றில் 3 வினாக்களுக்கு விடை தருக

**01)** புராண வரலாற்றை எழுதுக (20 புள்ளி)

**02)** பின்வரும் வினியோகங்களையும் அதன் கருத்தையும் தருக? (20 புள்ளி)

1) திரிபதாகம் 2) கத்தரிமுகம் 3) மயூரம்

**03)** காமன் கூத்தினைப் பற்றி எழுதுக? (20 புள்ளி)

**04)** புஸ்பாஞ்சலியின் ஸ்லோகத்தை எழுதி அதன் கருத்தையும் தருக (20 புள்ளி)

**05)** கிராமிய நடனங்களில் கரகம், காவடி பற்றி விளக்குக (20 புள்ளி)

**06)** ஏழு தாண்டவங்கள் அவை ஆடப்பட்ட இடங்கள் ஆடப்பட்ட சபைகள் என்பவற்றை அட்டவணைப்படுத்துக (20 புள்ளி)